**தேதி :03.09.2024**
**அசல் வழக்கு எண் : 198/2020**
**வாதி தரப்பு சாட்சி 1 : திருமதி. சியாம்லா**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.**
**<u>குறுக்கு விசாரணை ( 4 ஆம் பிரதிவாதிகாக)</u>**

எங்கள் அப்பா சொத்தில் பாகம் தராமல் விற்றுவிட்டார் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என் வீட்டுக்காரர் வழக்குரைஞரிடம் இந்த வழக்கு விவரங்களை தெரிவித்தார். இந்த வழக்கை சொத்தை விற்றவர்கள் மற்றும் அதை வாங்கியவர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளோம் இந்த வழக்கு சொத்தை யார் யார் விற்றார்கள் என்றால் என்டைய அப்பா விஜயா ரெட்டி, எனது சித்தப்பா சிவப்பா ரெட்டி என்டைய அண்ணன் ஸ்ரீநாத் ரெட்டி. அதை வாங்கியவர் பிரதீப் ஆவார். ஜுஜுவாடியில் உள்ள ச.எண். 671/3 இதைதவிர வேறு எந்த சொத்து குறித்தும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் இந்த சொத்தை தவிர வேறு எந்த சொத்தும் இல்லை. என்னுடைய தாத்தா பெயர் நாராயண ரெட்டி. அவருக்கு மொத்தம் 9 பிள்ளைகள் அதில் 5 பெண் பிள்ளைகள், 4 ஆண் பிள்ளைகள் அதில் பெண் பிள்ளைகள் இருவர் இறந்து விட்டனர். நாராயண ரெட்டி. அவர் பிள்ளைகளும் பாகபிரிவினை ஏதும் செய்துகொள்ளவில்லை. அந்த சொத்துக்கள்

அனைத்தையும் விற்றுவிட்டார்கள். அந்த சொத்துக்கள் மீது நான் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு சொத்து எனது தாத்தாவின் மூதாதையர் சொத்து ஆகும். எனது தாத்தா நாராயண ரெட்டி ஜூஜூவாடியிலும் நல்லூரிலும்.சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

**தொடர்ச்சிக்காக ஒத்திவைப்படுகிறது.**

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-R. Vasanthi.,
Additional District Judge (FAC),
Hosur.